**சென்னை பதினோராவது கூடுதல் சிறப்பு அமர்வு நீதிமன்றம்**

**(வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் தொடர்பான மத்திய புலனாய்வுத்துறை வழக்குகள்) சென்னை.**

**முன்னிலை. திரு.எஸ்.ஜவகர்,பி.எல்.,**

**11-வது கூடுதல் மாவட்ட அமர்வு சிறப்பு நீதிபதி.**

**2021-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 26-ஆம் நாள் வெள்ளிக்கிழமை.**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.1/2017ல்**

**கு.ப.ம.எண்.4159/2018**

தாமோதரன் மணி ... மனுதாரரர்/11-ஆம் எதிரி

/எதிர்/

அரசு தரப்பில்.

கூடுதல் கண்காணிப்பாளர்,
மத்தியபுலனாய்வுத் துறை
CBI/ACB/Chennai. ... எதிர்மனுதாரர்/புகார்தாரர்

இந்த மனுவானது என் முன்னிலையில் 26/03/2021 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/11-ஆம் எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருவாளர்கள்.எம்.குமார் அவர்கள் முன்னிலையாகியும் எதிர்மனுதாரர் /குற்றமுறையிடுபவர் தரப்பில் மத்தியப்புலனாய்வுத்துறை சிறப்பு வழக்கறிஞர் திரு.எம்.வி.தினகர் அவர்களும் முன்னிலையாகியும் மனு மற்றும் எதிருரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையின் பின்னர் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்திரவு.**

மனுதாரர்/11-ஆம் எதிரியை இந்த வழக்கின் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கக்

கோரி இந்த மனுவானது கு.வி.மு.ச பிரிவு-239ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2.மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம்.

இந்த வழக்கில் இந்த மனுதாரர்/11-ஆம் எதிரி ஆவார். இந்த வழக்கில் எதிர்மனுதாரர் /சிபிஐ இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, முதன்மை ரீஜினல் மேனேஜர், ரீஜினல் அலுவலகம், சென்னை-11 30/12/2015ல் கொடுத்த புகாரின் அடிப்படையில் இந்த எதிரி மற்றும் உள்ள எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள்-120பிஉ/இ 420, 511, 409, 419, 467, 468, 471, 472 மற்றும் 201ன் கீழும் மற்றும் ஊழல் தடுப்புச்சட்டம் பிரிவு-13(2) உ/இ13(1)(டி) மற்றும் 15ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பு வழக்கானது மனுதாரர்/11-ஆம் எதிரி தனிப்பட்ட நபர் என்றும், அவர் 3-ஆம் எதிரி ஃப்ராங்க்லின் சாமுவேல்ராஜ் டோனியுடைய நண்பர் அல்ல. அவர் முதல் தகவல் அறிக்கையில் எதிரி அல்ல என்றும், மற்றும் சிபிஐ அவரை கைது செய்யவில்லை. அரசு தரப்பில் யூகத்தின் அடிப்படையிலும் அவர்கள் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களைக் கொண்டும் இந்த மனுதாரர்/எதிரி மீது முதல் நோக்கு வழக்கு இருப்பதாக கருத முடியாது. இறுதி அறிக்கையை மட்டும் படித்து இந்த மனுதாரரை எதிரியாக கருத முடியாது என்றும், மனுதாரர்/11-ஆம் எதிரி இந்த வழக்கின் குற்ற சம்பவத்தில் எதிலும் ஈடுபடவில்லை. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களிலிருந்தும் சாட்சியத்திலிருந்துமே இந்த மனுதாரர்/எதிரி அப்பாவி என்பது தெரிய வரும். கடன் தொகையானது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, விஜயா ஹாஸ்பிடல் கிளை லட்சுமி விலாஸ் வங்கி, West Maredpally, Secunderabad-ற்கு 27/11/2015 அன்று ரூ.95 லட்சத்தினை ஆர்.டி.ஜி.எஸ் மூலமாக மெசர்ஸ். சென்ட்ரல் மார்க்கெட்டிங்கிற்கு நடப்புக்

கணக்கு எண்.0815351000000250ற்கு மாற்றப்பட்டுள்ளது. அத்தொகையை லட்சுமி விலாஸ் வங்கியிலிருந்து எடுக்க முயன்றபோது அந்த வங்கி மேலாளர் மேற்படி தொகையானது மிகவும் அதிகமான தொகை அதனை வங்கியிலிருந்து எடுப்பதற்கு உரிய ஆதாரத்தை தாக்கல் செய்யுமாறு கோரினார், அவ்வாறு தாக்கல் செய்யாவிடில் அதனை வங்கியிலிருந்து எடுக்க முடியாது என்று கூறினார். இறுதி அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ள சாட்சிகளின் வாக்குமூலம் மற்றும் ஆவணங்களை சேகரித்ததானது சாட்சியத்திற்காக தானே தவிர, அதனை வைத்து இந்த மனுதாரர் இந்த வழக்கில் குற்றவாளி என தீர்மானிக்க முடியாது. சாட்சிகள் 1 முதல் 69 வரையிலானவர்களின் வாக்குமூலங்கள், ஆவண எண்.டி.1 to டி.315 மற்றும் வழக்கு சொத்தான 1 முதல் 12 னை வைத்து அரசு தரப்பின் வழக்கினை தீர்மானிக்க முடியாது என்றும், இந்த மனுதாரர் கூடுதலாக எழுத்துமூலமான சங்கதிகளை தாக்கல் செய்வதற்கு அனுமதி அளிக்குமாறும், இந்த மனுதாரர்/எதிரியை இந்த வழக்கின் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று கோரி இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

**3. எதிர் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரை சுருக்கம்**

இந்த வழக்கானது எதிர்மனுதாரர்/சிபிஐ இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ரீஜினல் மேனேஜர் கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற எண்.ஆர்.சி.எம்.ஏ012015 ஏ0055 வழக்கு தொடுத்ததாகவம், அதில் 1-ஆம் எதிரி சாப்பா நடராஜ், 2-ஆம் எதிரி ஏ.ஸ்ரீராம் ஆகிய இருவரும் ஒன்று சேர்ந்து கொண்டு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, திருவேற்காடு கிளை மேலாளரிரன் துணை கொண்டு நடப்பு கணக்கு எண்.900னை TUFIDCO அதிகாரிகள் என பல தெரியாத நபர்களை ஆள் மாறாட்டம செய்து ரூ.23.40 கோடி தொகையை ஹைதராபாத்தில் உள்ள பல்வேறு கணக்குகளுக்கு மாற்றம் செய்துள்ளனர் மற்றும் 25 எண்ணிக்கைகளில் ரூ.23.40 கோடிக்கு Tamilnadu Urban Finance

Infrastructure and Development Corporation Limited (TUFIDCO) போலியான மற்றும் மோசடியான நிரந்தர வைப்பீடு இரசீதுகளை தாக்கல் செய்துள்ளனர். இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, விஜயா ஹாஸ்பிடல் கிளை, சென்னை மேற்படி தொகைகள் மாற்றம் செய்யப்பட்டுள்ள கணக்கினை ஆப்பரேட் செய்ய முடியாமல் முடக்கம் செய்தது. புலன் விசாரணை முடிந்த பிறகு எதிரிகள் மீது இ.த.ச பிரிவுகள்-120பி உ/இ420, 420/ உ/இ511, 409, 419, 467, 468, 471, 472 மற்றும் 201ன் கீழும் மற்றும் ஊழல் தடுப்புச்சட்டம் பிரிவு-13(2) உ/இ13(1)(டி) மற்றும் 15ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனுதாரர் / 11-ஆம் எதிரி குற்றச்சதியில் ஈடுபட்டு மேற்படி Tamilnadu Urban Finance Infrastructure and Development Corporation Limited (TUFIDCO)-னை ஏமாற்ற வேண்டுமென்ற எண்ணத்துடன் ரூ.23.40 கோடி தொகையை பெற்று மோசடியாக(TUFIDCO) பெயரில் கணக்கு துவங்கி அந்த கணக்கில் ரூ.23.40 கோடி தொகையை டெப்பாசிட் செய்துள்ளார் இது குறித்து சாட்சி 1முதன்மை பிராந்திய மேலாளர், ரீஜினல் தலைமை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ரீஜினல் அலுவலகம், சென்னை-2 மற்றும் சாட்சி-2 அசோகன் முந்தைய முதன்மை மேலாளர், பிராந்திய அலுவலகம் ஆகியோர் வங்கி நடப்புக் கணக்கு துவக்குவதற்கு கடைபிடிக்கும் நடைமுறைகள் குறித்து வாக்குமூலம் அளித்துள்ளதாகவும் மற்றும் அவர்கள் 1,2 மற்றும் 5-ஆம் எதிரிகளின் குற்றச் செய்கைகள் குறித்து கூறியுள்ளனர் என்றும், சாட்சி-3 திருமதி. சரோஜா எழுத்தர் மற்றும் தட்டச்சர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, ரீஜினல் அலுவலகம், சென்னை Tamilnadu Urban Finance Infrastructure and Development Corporation Limited (TUFIDCO) ற்கு தொகை மாற்றம் செய்தது குறித்தும் சொல்லியுள்ளார். சாட்சி-4 திருமதிஜி.உமா இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கோடம்பாக்கம் கிளை, சென்னை என்பவர 4 நிரந்தர வைப்பீடுகளுக்கான தொகை ரூ.3.40 கோடி தொகை M/s. TUFIDCO ன் நடப்புக் கணக்கு எண்.900ல் இருந்து

கொடுகக்கப்படடது. திருமதி.எஸ்.விஜயலட்சுமி, முந்தைய மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, விஜயா ஹாஸ்பிடல் கிளை, சென்னை (சாட்சி-5) 25 நிரந்தர வைப்பீடுகள் கொடுக்கப்படவில்லை என்றும் மற்றும் அதனை பெற்றுக் கொண்டதாகவும் மற்றும் TUFIDCO நிறுவனத்திற்கும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக் கிளைக்கும் இடையே நடந்த பரிவர்த்தனைகள் குறித்து வாக்குமூலம் கொடுத்துள்ளார்என்றும், திருமதி.ஏ.பாவையரசி முந்தைய முதுநிலை மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மதுரவாயல் கிளை, சென்னை-(சாட்சி-8) 1,2 எதிரிகள் தங்கள் வங்கியை பார்வையிட்டு M/s.TUFIDCO நிறுவனத்தின் மொத்தமான டெப்பாசிட்டுகளை எடுத்துக்கொள்ளுமாறு கூறினர் என்றும், 2.ஆம் எதிரி ஸ்வர்ணா, ஐ.ஏ.எஸ். தமிழக அரசின் செயலாளர் என்பவர் பெயரில் கணக்கு துவங்கியுள்ளார். TUFIDCO , இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் விஜயா ஹாஸ்பிடல் கிளை, சென்னையில் கணக்கு துவங்கவில்லை. என்.ஆர்.ரமேஷ் மெசர்ஸ்.வீரபத்ரா ஏஜன்சீஸ், செகந்திராபாத் அவர்கள் இந்த மனுதாரர் ரூ.95 லட்சம் தனது கணக்கில் கிரடிட் செய்யப்பட்டுள்ளது என்றும், அதனை வங்கியிலிருந்து எடுக்குமாறு கூறியுள்ளார் என கூறியுள்ளார். பின்பு மேற்படி பல்வேறு கணக்குகளிலிருந்து தொகைகள் மாற்றப்பட்டு மேற்படி தொகைகளை சுரண்டியுள்ளார். மேற்படி குற்றச்சதியின் தொடர்ச்சியாக எதிரிகள் 25 மோசடியான நிரந்தர வைப்பீடுகளை ரூ.23.40 கோடிக்கு TUFIDCO பெயரில் மோசடியாக தயாரித்துள்ளனர் இது டி.1 புகார் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த மனுதாரருக்கு எதிராக போதுமான சாட்சியங்களின் வாக்குமூலமும், ஆவணங்களும் உள்ளது என்றும் எனவே இந்த மனுதாரருக்கு எதிராக குற்றச்சாட்டு வனைய முதல்நோக்கு வழக்கு உள்ளது என்றும், எனவே மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரையில் கூறியுள்ளார்.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது.

5. இம்மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவெனில்,

மனுவில் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

6.<u>பிரச்சனைக்கான தீர்வு</u>

இந்த வழக்கில் மனுதாரர் தாமோதரன் மணி என்பவர் 11-ஆம் எதிரியாக உள்ளார். அவரும் இந்த வழக்கில் உள்ள மற்ற எதிரிகளுடன் சேர்ந்து இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் ரீஜினல் மேனேஜர் கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற எண்.RCMA012015A0055 என்ற வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது. 1,2 வங்கி அதிகாரிகள் அவர்கள் மற்ற எதிரிகளின் துணையோடு இந்தியன் ஓவர்சீஸ் வங்கி விஜயா ஹாஸ்பிடல் கிளை நடப்பு கணக்கு எண்.900னை TUFIDCO அதிகாரிகள் என்று பலரை ஆள்மாறாட்டம் செய்து கிட்டத்தட்ட ரூ.23.40 கோடி தொகையை ஹைதராபாத்தில் உள்ள பல்வேறு கணக்குகளுக்கு மாற்றும் செய்துள்ளார். அவ்வாறு மாற்றம் செய்வதற்கு போலியான மற்றும் மோசடியான நிரந்தர வைப்பீடுகளை தாக்கல் செய்து நடவடிக்கை எடுக்கும்போது இந்தியன் ஓவர்சீஸ் வங்கி விஜயா ஹாஸ்பிடல் கிளை , மேற்படி தொகைகளை மாற்றம் செய்யப்பட்டுள்ள இதர கணக்கில் மாற்றப்பட்டுள்ளது என்பது தெரிந்து முடக்கம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்து பல்வேறு சாட்சிகள் தங்களது வாக்குமூலத்தை அளித்துள்ளனர். அதன் அடிப்படையிலேயே தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கில் சாட்சியாக உள்ள LW55 N.R.Ramesh என்பவர் தனது வாக்குமூலத்தில் தன்னுடைய மைத்துனி ஷீலா அதிகாரம் பெற்ற அதிகாரியாக உள்ள சென்ட்ரல் மார்க்கெட்டிங் நிறுவனம் லட்சுமி விலாஸ் வங்கி ,West Maredpally, Secunderabad-ல் உள்ளது என்றும், அதில் கணக்கு எண்.0815351000000250 என்ற கணக்கு தொடங்கி அந்த சென்ட்ரல் மார்க்கெட்டிங் நிறுவனத்தை வியாபாரம் நிமித்தம் நடத்தி வருவதாகவும், தனக்கு தெரிந்த லட்சுமணன்

மற்றும் அவரது சகோதரர் வெங்கடேடஷ் மூலமாக தாமோதரன் மணி தனக்கு அறிமுகம் ஆனார் என்றும், அந்த தாமோதரன் மணி அயல்நாடு சம்மந்தப்பட்ட தொகைகள் அந்த கணக்கிற்கு வரும் என்றும், அதனை பணமாக்கி தனக்கு தரவேண்டுமென்றும், அவ்வாறு தரும் பட்சத்தில் உரிய கமிஷன் கொடுத்துவிடுவார் என்று கூறியுள்ளதாகவம், அதன் அடிப்படையில் ஆகஸ்ட் 2015-ல் ரூ.10 லட்சம் வந்தது என்றும், அது தன்னுடைய வீரபத்ரா ஏஜன்சியில் வந்தது என்றும், அதற்குரிய கமிஷனை தாமோதரன் மணியிடமிருந்து பெற்றுக் கொண்டதாகவும், இதே போன்று ரூ.3,4 கோடி அளவிலான தொகைகள் தாமோதரன் மணி பெயரில் தன் கணக்கிற்கு வந்து அதனை தான் கொடுத்துள்ளதாகவும், 27/11/2015 அன்று ரூ.95 லட்சம் சென்ட்ரல் மார்க்கெட்டிங் கணக்கிற்கு வந்து சென்றுள்ளதாகவும் அதனை எடுத்துக் கொடுக்க வேண்டுமென்ற தாமோதரன் மணியும், வெங்கடேஷும் தொலைபேசி மூலம் தெரிவித்ததாகவம், தன் மனைவிக்கு உடல் நலம் சரியில்லாததால் உடனே எடுத்துத் தர முடியவில்லை என்றும், வங்கி மேலாளர் தொகை அதிகமாக உள்ளதால் உரிய ஆதாரம் தந்தால் தான் கொடுக்க முடியும் என்று கூறிவிட்டதாகவும், அதன் பின்னிட்டு மோசடியான நிரந்தர வைப்பீடுகள் மூலம் பெணம் பெற்றள்ளது சம்மந்தமாக சிபிஐ விசாரணையின் மூலம் தனக்கு தெரிய வந்தது என்றும், பின்னர் அந்த கணக்கு முடிக்கப்பட்டது என்றும், மேற்படி என்.ஆர்.இரமேஷ் வாக்குமூலம் கொடுத்துள்ளார். குற்ற அறிக்கையில் TUFIDCOநிறுவனத்திற்கும், இந்தியன் ஓவர்சீஸ் வங்கிக்கும் இடையே நடந்த பரிவர்த்தனை மூலம் 25 மோசடியான நிரந்தர வைப்பீடுகளை வைத்து ரூ.23.40 கோடிக்கு மோசடி செய்யப்பட்டுள்ளதாக குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. இந்நிலையில் இந்த மனுதாரர் தன மனுவில் தன் மீது சாட்டப்பட்டுள்ள குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கின்ற வண்ணம் போதுமான ஆதாரங்களை மனுவில் முன் வைக்கவில்லை. அதே சமயம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள குற்ற அறிக்கை

மற்றும் ஆதாரங்களையும் மேற்படி சாட்சி-55 இரமேஷ் என்பவர் கு.வி.மு.ச பிரிவு-161ன்படியான வாக்குமூலத்தை பரிசீலிக்கும்பொழுது இந்த வழக்கிற்கு இந்த தாமோதரன் மணியை பொறுத்து அவர் மீது குற்றச்சாட்டு வனைவதற்கு போதுமான ஆதாரங்கள் உள்ளதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

8. இந்த வழக்கை பொறுத்த வரை மனுதாரருக்கு எதிராக வழக்கு தொடர்வதற்கு போதுமான சாட்சியங்கள் இல்லை என்பதையும், ஆவணங்கள் இல்லை என்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது. மனுதாரரின் மனுவிற்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையிலும் சுட்டிக்காட்டப்பட்ட சாட்சியங்களின் வாக்குமூலங்கள் மற்றும் ஆவணங்கள் இந்த வழக்கின் குற்றச்சாட்டில் 11-ஆம் எதிரிக்கு உள்ள தொடர்பினை முதல் நிலை ஆதாரத்தினை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. இதைப்போன்ற நிலைகளில் ஒரு நபருக்கு எதிராக முதல் நிலை ஆதாரம் இருக்குமானால், அது குறித்து ஆழமாக பரிசீலனை செய்து தீர்வு காணவேண்டியதில்லை என்றும், மேலோட்டமாகவே பரிசீலனை செய்து அந்த முதல்நிலை ஆதாரத்தின் அடிப்படையில் எதிரிக்கு எதிராக குற்றச்சாட்டு வனையலாம் என்று மாண்புமிகு உயர்நீதிமன்றங்களும், மாண்புமிகு உச்ச நீதிமன்றமும் பல்வேறு முன் தீர்ப்புகளில் இது குறித்து தீர்ப்பளித்துள்ளன.

13. எனவே இந்த வழக்கை பொறுத்து இந்த மனுதாரர்/11-ஆம் எதிரிக்கு எதிராக அரசு தரப்பு குற்ற அறிக்கையில் கண்டுள்ளவாறு ஆவண சாட்சியங்கள் மற்றும் சாட்சியத்தின் வாக்குமூலங்களின் அடிப்படையில் முதல்நிலை ஆதாரம் இருப்பதாக இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதால், இந்த மனுதாரர் சாட்சிகளின் விசாரணையை எதிர்நோக்கி அந்த சாட்சிகளின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை அடிப்பபடையில் வெளிப்படும் சங்கதிகளிலிருந்தே தன் வழக்கிற்கு தீர்வு கண்டு

கொள்ளவேண்டுமென்று தீர்மானித்து எதிரியின் இந்த மனுவினை அனுமதிக்க போதுமான முகாந்திரங்கள் இத்தருணத்தில் இல்லை என்று தீர்மானித்து இந்த மனுவினை தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகிறது.

14. **இறுதியில் இந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் ஏற்றப்பட்டு பின்னர் என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2021-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 26-ஆம் நாள் என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

**11-வது கூடுதல் மாவட்ட அமர்வு சிறப்பு நீதிபதி.**

**(மத்திய புலனாய்வுத்துறை வழக்குகள்)**

**வரைவு/தெளிவு உத்திரவு.**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.1/2017ல்**

**கு.ப.ம.எண்.4159/2018**

**நாள். 26.03.2021.**

**11-வது கூடுதல் சிறப்பு அமர்வு நீதிமன்றம்**